**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 91/2019**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 27.10.2025 | | |
| பெயர்: | ஞான குணாளன் (PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | அகோரம் |
| கிராமம்: | மேல வானகிரி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 65/2025 |

<u>**முதல் விசாரணை : 27.10.2025**</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 13.04.2019 தேதியிட்ட நான் பிரதிவாதிகளுக்கு எதிராக அனுப்பிய சட்டபூர்வ அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 15.04.2019 மற்றும் 20.04.2019 தேதியிட்ட Postal Delivery Report கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 20.04.2019 தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் 2 **வா.சா.ஆ.3** ஆகவும்

4. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.198/2017ன் தீர்ப்புரை கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.